1968 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போலவே வீரிய கம்பு உற்பத்தியாளர்கள் தரமான விதை உற்பத்தி செய்வதற்கு திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் யோசனை கூறுவதாய் இருந்தாலும் அதைப் பரிசிலனை செய்து தேசிய விதை கார்ப்பரேஷன் மூலம் அது சரியாக செய்யப் படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. க. ர. நல்லசிவன் : வீரிய சோளம், கம்பு இவை அதிகமான ருசியும் மணமும் சத்தும் உடையவையாக இருக்கின்றன. ஆனல் மார்க்கெட்டிலே பொதுமான அளவுக்கு எடுபடுவதில்லே. அதனுலே உற்பத்தி வேகமாகப் பெருகவில்லே. ஆகவே, இவற்றையெல்லாம் விசேஷமாக விளம்பரம் செய்யக்கூடிய முறையில் விசேஷ நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் கூறுவது உண்மைதான். விலே அதிகமாக இருக்கிற காரணத்தால் ஒரு கிலோவுக்கு 10 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலேமை இருப்பதால் வாங்குவதற்குத் தயங்குகிருர்கள். சில பேர்கள் வாங்கியும் விவசாயம் செய்கிருர்கள். அதன் காரணமாகத்தான் 43 ஆயிரம் ஏக்கர் உற்பத்தி செய்யப்பட்டது, இப்பொழுது 93 ஆயிரம் ஏக்கராக உயர்ந்திருக்கிறது. விவசாயக் கருத்தரங்குகளிலும், கால் நடைக் கருத்தரங்குகளிலும் இவைபற்றிச் சொல்வதற்கும், விவசாயிகள் நேரடியாக இவைபற்றித் தெரிந்துகொள்வதற்கும், விளம்பரங்கள் செய்துவருகிறேம். ருசியான கம்பாக இருப்பதால் விவசாயிகள் இதை விரும்பிச் சாப்பிடுகிற முறையில் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இது உப பொருளாகவும் இருக்கிறது.

சந்தைக்குழு ஊழியர்களுக்கு இலவச மருத்துவ உதவி

*355 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்க்கெட்டிங் கமிட்டி சிப்பந்திகளுக்கு இலவச மருத்துவ உதவி கொடுக்கப்படுகிறதா ?

(இ) இல்லே என்ருல் காரணம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லே.

(இ) சந்தைக் குழு ஊழியர்களின் ஊழிய நிபந்தனைகளை முறைப்படுத்துகிற விதிகளில் இச்சலுகைக்குரிய விதித்துறை எதுவும் இல்லே.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியமும் குறைவு. மற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதைவிட அவர்களுக்கு ஊதியம் குறைவாகக் கொடுக்கப் படுகிறது. அப்படி இருக்கும்பொழுது இந்த சலுகைகூட இல்லாத அளவுக்கு இருக்குமானல் அவர்கள் எவ்வளவு பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிருர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனிமேலாவது என். ஜி ஓ-க்கள் எப்படிப்

பார்க்கப்படுகிறார்களோ அதைப்போல சம்பள உயர்வு, மருத்துவ உதவி இவையெல்லாம் அவர்களுக்குக் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை, அதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற அடிப்படையில் 1—5—1966-ல், 3—5—1966-ல் தஞ்சாவூரில் மார்க்கெட் கமிட்டித் தலைவர்களும், உபதலைவர்களும், செயலாளர்களும் மாநாடு கூடி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 75 ரூபாய் மேற்கொண்டு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி விவசாயத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பினார்கள். அதைப் பரிசீலனை செய்து அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். சர்க்கார் அதைப் பரிவோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. அது இல்லை என்பது அர்த்தம் இல்லை. அவர்களுடைய பிரச்சனை கவனத்தில் இருந்து வருகிறது. விரைவிலே அதைப்பற்றிய முடிவு எடுக்கப்படும்.

தொழிலாளர் கல்வித் திட்டம்

***356 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் 'தொழிலாளர் கல்வித் திட்டம்', எத்தனை ஆலைகளில் அமுல் நடத்தப்பட்டுள்ளது?

(இ) மதுரையில் உள்ள சில ஆலைகளில் நடத்தப்பட்டு வந்த இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழகத்தில் 98 நூற்பு ஆலைகளில் தொழிலாளர் கல்வித்திட்டம் அமுல் நடத்தப்பட்டுள்ளது.

(இ) நூற்புத் தொழிலில் உள்ள பொருளாதார மந்த நிலையின் காரணமாக ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் கல்வித் திட்டத்திற்கு தற்பொழுது போதுமான ஊக்கம் அளிப்பதற்கு வசதியில்லாதிருப்பதால் மதுரையில் சில ஆலைகளில் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் கல்வித் திட்டம் மிகப் பயன் அளிக்கக்கூடிய திட்டம். இனிமேலாவது அந்த முறையிலே தொடர்ந்து கல்வியளிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மத்திய அரசு அமைத்த திட்டம். மாநில அரசின் ஒத்துழைப்போடு முத்தரப்பினரும் ஈடுபட்டு நடத்தி வருகிறார்கள். கட்டாயப் படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு யோசனை இல்லை.